உளி - 8 | ஓசை - 4 | அக்டோபர் - 2024 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவு எண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர்:
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு:
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு:
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி:
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு:
ஆர்.பிரகாஷ்

இணையதள முகவரி:
padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
# 8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

படைப்பு பிரைவேட் லிமிடெட்
# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,
கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024

admin@padaippu.com
+91 73388 97788, 73388 47788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வு செய்யப்பட்டவை.
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வரவேண்டுமெனில் முகநூல் படைப்புக் குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| சாய் மீரா | 04 |
| சுசித்ரா மாரன் | 05 |
| தாயகம் ரிஜா | 05 |
| மெஹராஜ்பேகம் | 05 |
| ரா.ராஜசேகர் | 06 |
| நித்யா | 07 |
| சுதா | 07 |
| லாஸ்யா | 08 |
| பாபு | 08 |
| மணிசங்கர் | 08 |
| மா. காளிதாஸ் | 09 |
| நிழலி | 10 |
| அழ. இரஜினிகாந்தன் | 11 |
| தி.கலையரசி | 11 |
| ஏகாதசி | 12 |
| காயத்ரி ராஜசேகர் | 12 |
| கோ.லீலா | 12 |
| கோ. பாரதிமோகன் | 13 |
| ஆ முருகேசுவரி | 13 |
| ஆகிஷா | 14 |
| தங்கராஜ் பழநி | 15 |
| அமுதா தமிழ் நாடன் | 16 |
| ரெங்கசாமி விஜய் | 16 |
| முகமது பாட்சா | 16 |
| எஸ்.பிரேமதாஸ் | 17 |
| தங்கேஸ் | 17 |
| கா. வெங்கடேஸ்வரன் | 17 |
| த. ரவீந்திரன் | 17 |
| திவ்யா ஈசன் | 18 |
| கோவை சசிகுமார் | 19 |
| மகேஷ் சிபி | 20 |
| ச.பாண்டியராஜ் | 20 |
| வி.வி. கலைச்செல்வி | 20 |
| சங்கரி சிவகணேசன் | 21 |
| பிரபுசங்கர் க | 21 |
| ச.ஆனந்தகுமார் | 22 |
| அ.சீனிவாசன் | 22 |
| க. அய்யப்பன் | 22 |
| ஸ்ரீவாரி மஞ்சு | 23 |
| மதுரா | 23 |
| கோ. சிவா தமிழ் | 24 |
| காசாவயல் கண்ணன் | 24 |
| செ. புனிதஜோதி | 24 |
| கதிரவன் வீ | 25 |
| பூங்கோதை கனகராஜன் | 25 |
| செ.ரா.கிருஷ்ணகுமாரி | 26 |
| பாத்திமா சுமையா | 26 |
| ஜெயதேவன் | 27 |
| ச. இராஜ்குமார் | 28 |
| அ.ராஜ்குமார் | 28 |
| சுப்பையா கந்தையா | 29 |
| குமரன்விஜி | 30 |
| நயினார் | 30 |
| நட்சத்திரப்பாடகன் | 30 |
| நேசமிகு ராஜகுமாரன் | 31 |
| ஈஸ்வரி நந்தா | 31 |
| ஃபாத்திமா சில்மியா | 32 |
| ஜீ.சுமித்ரா | 32 |
| இரா மதிபாலா | 33 |
| கார்த்திகேயன் | 34 |
| இயலிசம் | 35 |
| தமீம்.அசாருதீன் | 35 |
| நிலாபாரதி | 36 |
| கி.கவியரசன் | 36 |
| பன்னீர்செல்வம் | 37 |
| தினேஷ் பாரதி | 38 |
| அன்பழகன்ஜி | 39 |
| நரேன் | 39 |



தனித்த பெருங்களிறின்
பிளிறல் நிறைந்த
கா வின் சலனமற்ற நொடிகளெனத் தான்

பெய்யெனப் பெய்திருந்த
மழை நிரம்பிய
தெருவின் நெடி

போர் வீரர்களெனத்
திரண்டு வந்து
குண்டுகளுக்கு பதில்
அம்புகள் எய்து
திரும்பியிருக்கிறது
இந்த மழை
வீழ்ந்த அம்புகள்
இனி முளைவிடுங்காலம்

சாளரத்தின் வெளித்தெரிகிற
முட்காட்டின் கிளையொன்றில்
தனித்து நிற்கிற
தேன்சிட்டின் சிறு கூடு
மீதே என் முழு நினைப்பும்
இம்மழையிரவில்

நாளை நாளையெனத்
தள்ளிப்போடுகிறான்
பாதையோரம் கடைவிரிக்கும்
கைக்குட்டைக் கடைக்காரன்
அவன் நாளையெல்லாம்
அள்ளித் தின்று விடுகிறது
இப்பெருமழை

நாள் பட்டொழிந்த மழை
ஒரு மூச்சுப் பெருமழைக்கு
ஓராயிரம் கீரைகளும்
ஒரு உரல் குழிப் பெருமழைக்கு
கடலையும் உளுந்தும்
ஒரு குட்டைப் பெருமழைக்கு
சம்பாவும் பொன்னியும்
ஒரு கை அமில மழைக்கு
உடைந்தழுகிற வானமும்

நாளைக்கும் மழை வருமாம்
தென்னை நார் மண் கலவையை
தெளிவுபடுத்தி வைக்கிறார்
நெல் பூமி விற்று வாங்கிய
மகன் வீட்டு மாடித்தோட்டத்தில்
கீரைகளுக்கென

சாய் மீரா



சிரமப்பட்டுக் கட்டுகிற
நம்பிக்கைக் கூடு
உடைபடுகிறது

சிதிலங்களைக் கொண்டு
மீளச் சமைக்கிற கூடும்
முன்பிருந்ததும்
ஒன்றல்ல

ஒட்டாத மணற்துகள்

உதறிவிட மனமின்றி
குவித்து குவித்துச்
செய்கிறக்
கோபுரம்

கலைப்பதற்கென்றே
வருகிற அலையைத்
தடுப்பதறியாக் கைகள்

கூடென்பது கட்டுவதல்ல
அமைவது

சுசித்ரா மாரன்

மழைகாலங்களில்
திடீரென பொழிந்து
செல்லும்
மழையைப்போல
உன் நினைவுகளில்
நிரம்பியிருக்கும்
என்னை
நினைவுபடுத்தி
நனைத்துவிட்டே
சென்றது மழை

தாயகம் ரிஜா

நீ தேடுகிறாய்
என்பது
நீ என்னை காதலிக்கிறாய்
என்பதை விட
கர்வம் மிகுந்த
தருணம்

மெஹராஜ்பேகம்



என்ன எழுதவென்றே
தெரியவில்லை

எல்லோரும்
என்னென்னவோ எழுத

என்ன எழுதவென்றே
தெரியவில்லை

எங்கே தேட என்னெழுத்தை?
கோண மாறுபாட்டுடன்
கொட்டுகின்ற எழுத்துக் கிடங்கில்

பட்டாம்பூச்சி
பாம்பான கதையை

ஊசிமழையில்
ஒளிந்திருந்த கத்தியை

வெளிச்ச அடுக்கில்
விழித்திருந்த இருட்டை

பாசத்தில் வழிந்த
பகைப் பிசினை

ஆசிரிய வழியில்
அப்பிக்கிடந்த குரூரத்தை

கதையில் உறைந்த
கவிதையை
கவிதையில் உறங்கிய
கதையை

எதிலும் எதிர் நிற்கும்
அரசியலை என

என்ன எழுதவென்றே
தெரியவில்லை

ரா.ராஜசேகர்



தாகம் தீர்ந்தது மழைக்கு
உன்னையும் என்னையும்
ஒருசேர நனைத்த பின்பு..
*
சில்லென்று வீசுகிறது காற்று
நீயெங்கோ அருகில் தான்
இருக்கிறாய்..
*
இருள் மூடிக்கிடக்கும் வானில்
சட்டென்று வெட்டும் மின்னல்
உன் கண்களின் ஒளியாக..
*
உன்னைத்தழுவிய ஆனந்தத்தில்
துள்ளிக்குதிக்குது மழைத்துளி
கடல் கலந்து அலையாக..
*
நனைகிறேன் கண்ணீரின்
தடம் தெரியாமல் துடைக்கிறது
உன்னைப்போலவே மழையும்..

நித்யா

தேங்கிய மழையில்
தெரியும் ஒரு உடைந்த வானம்!!
வானம் ஏந்திய மழைநீரில்
சிறு பறவைகள் வானமென எண்ணி
சிறகை விரித்து
நீரில் பறக்கிறது!!

வானம் நனைந்ததோ என குழம்பி
சிறகை உலர்த்தி
தலை சாய்த்து பார்கிறது!!

தன் இனமொரு புள்ளினம்
தன்னை பார்த்ததை எண்ணி
மீண்டும் ஒருமுறை வியந்து
பார்க்கிறது!!

உடைந்த வானத்தின் பகுதியை தேடி
விண்ணில் பறக்கிறது!!
எதை தேடி வந்தோம் என்பதை மறந்து
மீண்டும் இரை தேட தரையிறங்கி
உடைந்த வானில் உடல் நனைத்து கொள்கிறது!!

சுதா



சொற்களையெல்லாம்
சோழிகளாக்கி சுழட்டி எறிந்து
தேவையானதை எடுத்து
வாக்கியங்களாக்கி உன்
வசப்படுத்தி விடுகிறாய் !

எழுத்துகளின் மேல்
வைக்காத புள்ளிகளால்
மாறிப்போன அர்த்தங்களாய்
திணறிப்போய் நிற்கிறேன் !

எழுத்துகளின் மேல் வைக்காத
புள்ளிக்காக மன்னிப்பும்
இலவச இணைப்பாக
எழுத்துகளின் அருகில்
நாலைந்து புள்ளிகளும்
சுமாவும் தருகிறாய்..

இப்போது
நீ பதுக்கி வைத்த
கேள்விக்குறிகளை
நான் எங்கு போய் தேடுவேன்?

லாஸ்யா

நிலாக்கூடையில்
நிரப்ப முடியாத
நீல வானம்
நட்சத்திரப்பூக்கள்

பாபு

காடுகளை
அபகரிக்கும்
மனிதர்கள் ..
சாலையெங்கும்
பிச்சைக்கார
குரங்குகள்..

மணிசங்கர்



கசகசப்பை நீக்கும் பொருட்டு
ஒழுகும் குழாயைச்
சற்றே திருகி நிறுத்துவது போலத்
தொடங்கியது நம் உரையாடல்.

கொஞ்சம் இருங்கள்
கைகழுவிக் கொள்கிறேன் என
உள்ளே நுழைந்த குழந்தை
முகத்தையும் அலம்பிக் கொண்டது.

பள்ளம் மேடு கரடுமுரடு கவலையின்றி
நம் சொற்கள்
பூத்திருந்த பரப்பை நோக்கி
வண்ணத்துப்பூச்சியைப் போலப் பறந்தது.

பேச்சுக் கவனத்தில் நாம் கவனிக்கவில்லை
அதைப் பிடிக்கப் பின்னாலேயே சென்ற
அக்குழந்தையை.

தென்றலைப் போலத் தொடங்கி
புயலாக வலுப்பெற்றுத்
தாழ்வு மண்டலமாக
நம் உரையாடல் உருமாறிய போது
என் குடைக்குள் வருகிறீர்களா
எனக் கேட்டது அக்குழந்தை.

நம்மிடமிருந்து விடுபட்ட
வறட்டுப் புன்னகையை
மின்மினிப் பூச்சியைப் போலப் பிடித்து
வண்ணத்துப்பூச்சிப் பெட்டிக்குள் அடைத்துக்
கொண்டது.

உரையாடலின் தொடக்கத்தில்
பொசுக்கென அறுபட்ட மௌன இழையை
விளையாட்டுப் போக்கில்
முடிச்சுப் போட்டு இணைத்தது அக்குழந்தை.

அவ்விடம் விட்டு அகலும் முன்
உன்னைக் கொஞ்சம் முன்னே போகவிட்டு
முழந்தாளிட்டு அமர்ந்து
உன் பெயரென்ன என்றேன்.

உண்மை என்றது அக்குழந்தை
உண்மையாகவா என்றேன்.

மா. காளிதாஸ்



எவ்வளவு தூரம் தான்
சென்று கொண்டிருக்கிறாய்..

விடியலில் கைகளை கோர்த்துக் கொண்டு
பேசிய போது சொல்கிறாய்

நான் தொலைதூர நிலவெனினும்
உன் மீது படரந்த ஒளியென

உன் சொற்களில் தான்
நான் எப்படியோ தோற்றுப் போகிறேன்..

ஒரு இளைப்பாறுதலுக்கு பின்
உன் கரங்களை தேடிக் கொண்டிருக்கிறேன்

வெகு தூரத்தில் நீ என்னை சந்தித்த
காற்றுக் குமிழிக்குள் உருவங்களாய்
உடைந்து சிதறுகிறாய் ..

என் நிழலை தட்டி விட்டு அது
பல கோடுகளாய் பிரிகையில்

என்னிலிருந்து பிரிந்து இன்னும்
தூரத்தை தேடி ஓடுகிறாய்

உன் பின்னாலேயே தொடர்ந்து வரும்
கால்கள் தன் தசைத் திசுக்களை
உருக்கி உருக்கி பாதையமைத்து
கொண்டிருக்கிறது..

உன்னை தேடும் பயணத்தில் நான்
திக்கற்று கிடக்கிறேன்

என் இரத்த அணுக்களின் பாதைகள்
உனக்காக தான் திரண்டிருக்கிறது ..

நினைவில் இருப்பதற்கேனும்
ஒருமுறை நானிருக்கும் பாதையில்
ஒரு நடைபயணம் சென்று விட்டு போ ..

நிழலி



நேர்த்திக் கடனை
நிறைவேற்றுவதற்காக
நெடுநாள் வளர்த்த கிடாயை
பூசாரியிடம் ஒப்படைத்துவிட்டு
கைகூப்பி நிற்கிறேன்
நிறைய வேண்டுதல்களோடு..
பலிபீடம் நோக்கி
இழுத்துப்போகும் பூசாரியிடமிருந்து
பலவந்தமாய் திமிறி
தப்பிக்க எத்தனித்துதோற்றுப்போய்..
பரிதாபமாக..
என்னையே
திரும்பித் திரும்பிப் பார்த்தபடி
செல்லும் அந்த
கிடாயின் வேண்டுதல்
என்னவாக இருந்திருக்கும் ..?

அழ. இரஜினிகாந்தன்

நீண்ட காலம் கழித்துப் பாய்ந்தாலும்
நதியை
தடம் மாறாமல் ஏந்திக் கொள்ளும்
நிலத்தின் கருணை

தன்னிடையே
தவறி விழுந்த விதையை
முளைவிடச் செய்யும் பாறையின் வாஞ்சை

பால் அருந்தும் குட்டி
வேறு இனம் எனத் தெரிந்தும்
மடி சுரக்கும் விலங்கின் தாய்மை

இத்தனை அன்பும்
உன்னிடத்தில் இருக்கிற தைரியத்தில் தான்
கருவறையில் கால் உதைத்து
விளையாடும் சிசுவைப்போல்
தொல்லையாகவே இருக்கிறேன்
தேவதா

தி.கலையரசி



என்னிடம் ஓர் இரவு இருக்கிறது மற்றும்
ஒரு பகலும் இருக்கிறது
உங்களில் யாராவது
என்னைச் சந்திக்க விரும்பினால்
நீங்கள் என் இரவில் சந்திப்பீர்களா
என் பகலில் சந்திப்பீர்களா ஆனால்
உங்களிடமும் ஓர் இரவு இருக்கிறது
மற்றும்
ஒரு பகலும் இருக்கிறது

ஏகாதசி

வனாந்திரத்தில் ஏகாந்தமாக
என்னால் நிம்மதியாக
இருக்க முடியாது
பெருநகர நெரிசலில்
என்னால் கொண்டாட்டமாக
இழைய முடியாது
நகரத்தில் என் தனியறையில் மட்டுமே
நான் சுவாசிக்க முடியும்
கடல்சூழ் கப்பலில்
தண்ணீர் போத்தல் போல
நீ வேண்டுமெனக்கு.

காயத்ரி ராஜசேகர்

பெருமழையாய்
ஆர்ப்பரிக்கிறது வானம்.
வெறுமையில் உலர்ந்திருக்கும்
மனதை சிறிதும்
நனைத்துவிட முடியாத மழை.

நிலத்தை நனைப்பதுபோல்
அவ்வளவு எளிதில்லை
மனதை நனைப்பது மழையே !
மனதின் கொண்டாட்டம்தான்
மழையின் ஈரம்..

கோ.லீலா



தோட்டத்துக் கிணற்றில்
நீரிறைக்க
மேலெழுகிறது உன் முத்தம்

நண்பகல் நிசப்தத்தில்
நதியில் அசையும்
பூமர நிழலில் நெளிகிறது
உன் நடனம்

தேநீர்க் கோப்பையில்
உதடு குவித்து
நான் உறிஞ்சியது
உன் வாசனை

உன் நினைவுகளில்
தலைசாய்த்துத் துயில்கிறது
என் இரவு

ஒரு நீள் பிரிவுக்குப் பிறகான
சந்திப்பு தினத்தில்
ரயிலுக்கு முன்பே
நிலையம் வந்து நிற்கிறாய் நீ

இரு இதயங்களை
தண்டவாளங்களாக்கி
இசைத்துச் செல்கிறது
இன்னும் வராத ரயில்

கோ. பாரதிமோகன்

கொள்கலனுக்குள்
நடக்கும் வேதி வினையை
அறிய முற்படுவதிலே
பெருகி விடுகிறது
அன்பின் வலி(மை)..

நிவாரண கூற்று
எந்த புள்ளியிலும்
முற்றுப்புள்ளியை முன்மொழியவில்லை
என்பதைதே பதியும் காற்புள்ளி
காட்டிக்கொடுக்கிறது..

இருண்ட வானின்
மடியில் அந்த கூடாரம்
நிராசைகளின் நீட்சிகளாக
எழுந்து வாசல் திறக்கிறது
வா வாழ்ந்து பார்க்கலாம்..

ஆ முருகேசுவரி



உயர் வெப்பக் காற்று
என்னுள் வீசும் போதெல்லாம்
எந்த அறிகுறிகளும் காட்டாது
வந்து அணைத்துக் கொள்வாள்
குளிர்வித்தல் என்பது
அவளின் ஆதி சுபாவம்
*

புற்களில் விழுந்து
மோட்சத்தை அடையும்
சிறு மழைத்துளிக்கும்
அவள் கன்னம் தழுவி
உடன் மறையும் பருக்களும்
ஒரே சாயல்
*

மழைக்கால தேநீரொன்று
தொண்டைவழி உள்ளிறங்கும்
பெரும் சுகமும்
உதட்டின் உரசலில்
உயிர் கொல்லுமவள் விதமும்
நிச்சயமாக ஓர் மூலத்திலிருந்தே
தோன்றியிருக்க வேண்டும்.
*

மாறுபட்ட காலநிலைகளாய்
ஒவ்வொரு ஊடலிலும்
இடியும் மின்னலுமாய்
சினம் கொண்டு சத்தமிட்டு
இறுதியில் இரு மேகத்தை போல்
என்னோடு ஒட்டிக் கொள்வாள்

இப்போது
காதலின் மோக மழை
பொழிய தொடங்கியிருக்கிறது.
*

அவள் முடிந்திடா கருங்கூந்தலொரு
அளந்திடவியலா இருள்சூழ் வானம்

அவளின் கண்களொரு
தீமூட்டி வேள்வி நடத்தும் ஒளிக்கீற்று

மலைச்சரிவில் உருண்டோடும்
மாரிகால மையம் அவள் மூக்கு நுனி

மொத்தத்தில்
எனை முழுதாய்
நனைக்க வந்த அவளொரு
நடமாடும் கோடைகால மழைச்சாரல்.

அவளும் மழையும்..

ஆகிஷா



## லிப்ஸ்டிக் பூசியிருப்பவளின் புன்னகையின் நிறம்

உதடுகளுக்கு லிப்ஸ்டிக்
பூசிக்கொள்பவள்
அந்த லிப்ஸ்டிக்கை
ஆசீர்வதிக்கிறாள்..
மனதில் வடுக்களை
அதிகம் சுமப்பவள்
அதை மறைக்க
உதடுகளுக்கு
லிப்ஸ்டிக் பூசிக்கொள்கிறாள்..

பல வண்ணக் கனவுகளை
சுமப்பவளின்
ஹேண்ட் பேக்கில்
பல வண்ண
லிப்ஸ்டிக்குகள்
வைத்திருக்கிறாள்..
சிகப்பு நிற லிப்ஸ்டிக்
பூசியிருப்பவள்
அவள் பயணிக்கும்
நகரச் சாலைகளுக்கு
சிகப்பு வண்ணம்
தீட்டியபடியே செல்கிறாள்..
ஒரு ரூல்ட் நோட்டின்
வரிகளில்
கவிதை எழுதுவது போல
அவள்
உதடுகளின் வரிகளில்
லிப்ஸ்டிக் பூசிக்கொள்கிறாள்..
ஓவியத்திற்கான முன்னேற்பாடாக
வெளி கோடுகள் வரைவது போல
லிப்ஸ்டிக் தீட்டுவதற்குத் தயாராக
லிப் லைனர் கொண்டு
வெளி கோடு
வரைந்து கொள்கிறாள்..
தன் நாவால் அடிக்கடி
உதடுகளை
எச்சில் படுத்திப் பழகியவள்
உண்ணத் தகுந்த லிப்ஸ்டிக்கை
பூசிக்கொள்கிறாள்..
லிப்ஸ்டிக் பூசிக்கொள்பவளின்
வானில் எப்போதும்
வானவில் இருக்கிறது..
தனக்கு பிறநிதித்துவமில்லா
இடங்களில்
லிப்ஸ்டிக் பூசியிருப்பவள்
அவளின்
லிப்ஸ்டிக் கறைகளை விட்டுச் செல்கிறாள்..
லிப்ஸ்டிக் பூசியிருப்பவளின்
உதடுகள் பேசு முன்னமே
அவளின் லிப்ஸ்டிக் பேசுகிறது
அவள் புன்னகை செய்யாவிடினும்
அவளின் லிப்ஸ்டிக் புன்னகைக்கிறது..

தங்கராஜ் பழநி



மழையைத் திரட்டி
நடந்து செல்கிற மரவட்டையின் முதுகில்
வரிக்கோடுகள்.

சருகுகளின்
சலசலப்பிற்கிடையில்
கடனேயென்று மண்ணுருட்டி வண்டுகள்.

கடலை கிழித்துவிடுவது போல்
ஊளையிட்டு
நிதானமிழக்கிறது எதற்கோ காற்றின் சப்தம்.

இருட்டுக்குள்
மறைந்து கொள்கிறது பூனை..
கண்களை மூடிக்கொண்டு

ஓடாத குதிரையின் மீது
உட்கார்ந்திருக்கும்
இரைக் கிடைக்காதப் பல்லியும்,
சேற்றுக்குள் புதைந்து கொண்ட தவளையும்
ஒத்த இசையில்
காட்டிக் கொடுத்துக் கொள்கின்றன.

இல்லாத ஒன்றை
இழுத்துப் போர்த்திக் கொண்டவனின்
இருமல்
காலத்தின் துணியை அலசுகிறது..

யாருக்கும் எதுவும் கேட்கவில்லை.

முகமது பாட்சா

அடடா..
துளி சர்க்கரை
சேர்த்துச் சமைத்த
கவிதையை
மூடிவைக்க மறந்து
விட்டேன்..

இழுத்துக் கொண்டு
போய்விட்டது
எறும்புக் கூட்டமொன்று ..

அமுதா தமிழ் நாடன்

மழை வேண்டி
யாகங்கள்
மரங்களை வெட்டி..

ரெங்கசாமி விஜய்



மெழுகுவர்த்தியின்
தியாகத்தைப் பேசுபவர்கள்
தீக்குச்சியின் தீக்குளிப்பைப்
பற்றிப் பேசுவதேயில்லை
தேவையைப் பொறுத்தே
தியாகமும் அளவிடப்படுகிறது..

எஸ்.பிரேமதாஸ்

கரையும் காகங்களுக்கு
கரையும் மனது கொண்டவர்கள்
நல்ல பாம்பையும் அடித்து
பாலூற்றி புதைப்பவர்கள்
எறும்பை மிதித்து விட எத்தனிக்கையில்
ஆமை போல அணிச்சையாக
காலை உள்ளிழுத்துக் கொள்பவர்கள்
சிக்னலில் நிறுத்தி பிச்சை கேட்கும்
கண்ணற்றவனின் நெளிந்த பாத்திரம் நிறைய
சுடு சொற்களை
வீசி விட்டுப் பறப்பார்கள்

தங்கேஸ்

மழையோ வெயிலோ
விரிகிற குடை கருப்பாக
இருக்கவேண்டுமென்று
அவசியமில்லை அது..
பச்சையாககூட இருக்கலாம்
அந்த குடையின் பெயர்
மரமென்றுகூட இருக்கலாம்
அது அம்மாவின் சாயலாகவும் இருக்கலாம்.

கா. வெங்கடேஸ்வரன்

இறந்த மனிதன்
இரக்கம் காட்ட மறுக்கிறான்
வெட்டியான்..!

த. ரவீந்திரன்



## மஞ்சள் நாள் குறிப்புகள்

முதலில் அந்த பெண்
அவனை ஒருகளித்துப் பார்த்தாள்
அவன் பார்த்தான் அவ்வளவுதான்

பிறகு
வானம் எங்கெங்கும்
மஞ்சள் நிறமே வியாபித்திருந்தது

தலைக்கு மேல் காக்காகள்
மஞ்சள் நிறத்தில் பறந்தன

மஞ்சள் நிற சாலையில்
மஞ்சள் நிற வாகனங்கள் போயின

பூங்காவில் இருந்த மரங்களில்
இலைகளும்
பூக்களும்
வெளிர் மஞ்சள் நிறத்திற்கு மாறின

சமூக வலைதளம் எங்கும்
“மஞ்சள் பூசும் மஞ்சள் பூசும்
வஞ்சிப் பூங்கொடி..”
பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது

அவள் கட்டியிருந்த
மஞ்சள் நிற சேலையின்
வெள்ளை நிறக் கட்டத்தில்
அந்த நாளை
அவன் “மங்களம்” என்று
குறிப்பெடுத்துக்கொண்டான்.

அப்படியே
மஞ்சள் நிறக் கனவு கண்டான்.

அவன் கண்களை உற்று பார்த்தேன்
மஞ்சள் நிறம் பூத்திருந்தது
நான் “மஞ்சள் காமாலை” என்று
குறிப்பெடுத்துக்கொண்டேன்.

திவ்யா ஈசன்



நிதர்சன விளிம்பின்
எல்லைக் கோடுகளின்
வரையரைக்கு
இடப்பட்டுள்ள புள்ளிகள்
தனக்கான இடத்தை அடைவதற்குள்
தடுத்து நிறுத்துகிறது
அகங்காரம்

முட்டி மோதித் திரும்புகையில்
தனக்கான வீரியத்தை
இழந்த அலையின் மறுபக்கத்தை
தன்னகத்தே அடக்கிக்கொள்கிறது
கடலின் அகங்காரம்

வேகமாகச் சுழன்றடிக்கும்
வெப்பச்சலனத்தின் புழுதிப்புயல்
வான் எல்லைவரை வாரியிரைக்கின்றது
வேகத்தின் அகங்காரம்

எல்லாமே முற்றுப்பெற்ற
நிலைப்பாட்டின் இறுதியில்
தொடங்குகின்றான்
ஆறறிவு மனிதன்
எல்லாமே தனக்குள் அடங்கவேண்டுமென்ற
அகங்காரம்

அனைத்தையும் கடந்து செல்கையில்
எங்கிருந்தோ எட்டிப்பார்க்கும்
வறுமை தனக்கான ஓரிடத்தை
நிலைப்படுத்திக் கொள்ள முற்படுகையில்
எல்லாவற்றையும் இழந்து
தன்னினத்தைத் தானே
அடிமைப்படுத்துகிறது
பணமென்ற பெருந்தீனி

கோவை சசிகுமார்



அதற்கென
பிரத்யேக இயந்திரங்கள்
வந்துவிட்ட பின்பு
பலூன் வியாபாரிகள்
தங்களின் மூச்சுக்காற்றை
பலூன்களில் அடைப்பதுமில்லை
விற்பதுமில்லை
இப்போதெல்லாம் உயிர்ப்பற்ற பலூன்களே
காற்றிலாடுகின்றன

மகேஷ் சிபி

கை நீட்டியவருக்கு
காசு போட்டாயிற்று
பைத்தியகாரருக்கு பாழும்
கிழிசலைத் தந்தாயிற்று
கொஞ்சம் பூவை
சாமிக்கும் கொடுத்தாயிற்று
எல்லாம் சரியாக செய்திருப்பதாக
எண்ணிக் கொள்கிறேன்

இறுதியாக
ஒருமுறை மணியும் அடித்துவிடுகிறேன்
கடவுள் இருந்துவிட்டுப் போகட்டும்..

வி.வி. கலைச்செல்வி

ஏமாற்றத்திற்கும்
அதை ஏற்றுக்கொள்வதற்கும்
இடையிலான
தூரத்தில்தான்
ஏதேதோ
நடந்துவிடுகிறது!

ச.பாண்டியராஜ்



இன்னும் நிறைய இருக்கிறது
எதிர்கொள்வதற்கு

எளிதில் கடந்துவந்த கதவுகள்..
எளிதில் கடக்க முடியாத
சொற்ப காட்சிகள்..
இன்னும்  திறவாத கதவுகள் என
நிறைய இருக்கிறது..

பாலையின் பரந்து விரிந்து
வெப்பம் கொலிக்கும்
அனலை ஒற்றியெடுத்த
பாதங்களை பசியத்தோடு நீர்த்த
ஈர நிலத்தை ஒத்திருக்கின்றன
ஆற்றுப்படுத்தக்
காத்திருக்கும் காலம்..

வேர்விட்டுக் கிடக்கிறது எதையும்
கடந்திட வேண்டுமென்ற துடிப்பு..
வேருக்கு நீராகிறது முயற்சி
என்கிற மூலமந்திரம்..

ஆம்..
அத்தனை கதவுகளையும் தாண்டி
என்னை நான் எதிர்கொள்ளும் போது
பூரணமடைந்துவிடுவேன்..

சங்கரி சிவகணேசன்

தைலங்களின் வாசத்தில்
மல்லிகைப்பூ தொலைந்து
ஒரு சகாப்தமாகிறது
உறங்குவதற்கு முன்பு
போட்டுக்கொள்ள வேண்டிய
மாத்திரைகளை தினமும்
அவன் தான் ஞாபகப்படுத்துகிறான்
இரண்டு வருடத்திற்கு முன்பு
இடது பக்க மார்போடு
அவளின் நிறத்தையும் கூந்தலையும்
பறித்துக்கொண்டது புற்று
இயலாமைகளின் ஏக்கத்தில்
எப்போதும் உச்சத்திலிருக்கிறது
அவள் கோபம்
காதலித்த நாட்களை விடவும்
கோடி மடங்கு கூடுதலாக ஜொலிக்கிறது
அவன் மீதான காதல்
அவளின் இரு விழிகளில்..

பிரபுசங்கர் க



மிதிவண்டியில் கடைவீதி
திரும்புகையில்
அனிச்சையாய் தலைகுனிந்து
கொள்வார்..

கண்ணீரின் அடர்த்தியை
யாரும் பார்க்காமல் இருக்க
செய்கிற பிரயத்தனம்..

முற்றம் தொலைத்து மச்சுவீடாய்
மாறி வருடங்கள் கடந்தும்
ஏலம் விட்ட நாள் மட்டும்
தொண்டைமுள் நிகழ்வு அவருக்கு..

விற்ற ஊரிலேயே வயிறு வளர்க்கும்
இயலாமை வாழ்வியல்
எதிரிக்கும் வேண்டாமென முனகும்
அப்பாவின் வேண்டுதல்..
கடவுளுக்கு கேட்காத எத்தனையோ
பிரார்த்தனைகளில் இதுவும் ஒன்று..

ச.ஆனந்தகுமார்

தலைமுறையின்
முதல் மகிழுந்தை வாங்கி
தந்தையை ஏற்றி
கிராமம் முழுதும்
வலம் வந்தான்.

வண்டியை விட்டிறங்கும்போது
அப்பாவிற்கு நான்கு கால்கள்
இருந்தன.
ஆனாலும் தரையில்
கால் படவில்லை..

அ.சீனிவாசன்

சில சமயம் நிலா
சில சமயம் நட்சத்திரங்கள்
சில சமயம்
நிலவோடு நட்சத்திரங்கள்
சில சமயம்
இருள் நிறைந்த வானம்
அவ்வளவு தான்
உன் நினைவு.

க. அய்யப்பன்



திறந்தே இருக்கும்
என் வாசல்
உனக்காக..
என்றாலும்
வாசலை நாடாதீர் ..

நிழலாய் நானிருப்பேன்
என்றாலும்
உருவத்துக்குள் அவர்களைத் தேடாதீர்..

குறுஞ்செய்தி போதும்
உன்னருகிலிருப்பேன்
என்றாலும் அவசர கதியில்
அவர்களைத் தேடாதீர்..

நினைவின் ஆக்கிரமிப்பில்
ஓர் பகுதி நீயென்று
புலம்பினாலும்
அவர்களின் நினைவுகளை
குழம்பிப்போய் தேடாதீர்..

ஓர் வார்த்தை சொல்ல வேண்டுமென
சொல்லுவதையெல்லாம்
சொல்லென கொள்ளாதீர்..
கொல்லென கொன்றுவிடும்
கையளவு இதயத்தை..

ஸ்ரீவாரி மஞ்சு

உரித்துப் போட்ட சட்டைகள்
முள்வேலியெங்கும்.

அங்குமிங்குமாய்
ஊர்ந்து கொண்டிருப்பவைகளை
மிதித்தால் தான்
பகையென்றில்லை.

எப்போது? எங்கு?
விடத்தைக் கக்கப்போவதை
யாருமறியார்.

இருக்கட்டும்..
நஞ்சை நிறுத்த தானே
நீலகண்டம்.

உயிர்பயம்
காட்டுவதெல்லாம்
இப்போது
தேய்வழக்கு.

மதுரா



நீ இரவெல்லாம் என்னுடன்
பேசிய காதல்
கதைகள் தான்
விடியலில்
சாரல் மழையாக பெய்கிறது.
அதில் இந்த கவிதை நனைகிறது.

கோ. சிவா தமிழ்

சிறப்பு வழிபாட்டுக்கு செலுத்த
வைத்திருந்த பணத்தை
காலடியில் சிணுங்கிய சிறுமியின்
கைகளில் திணித்துவிட்டு
பொது தரிசன வரிசையில் நின்றான்.
கருவறையில் அம்மன்
அந்த சிறுமியைப்போலவே
சிரித்துக்கொண்டிருந்தாள்.

காசாவயல் கண்ணன்

முறிந்த மரமாய் கிடந்த நாளில்
ஒரு வனத்திற்கு
அழைத்துசெல்கிறது என் கனவு..

முனையொடிந்த பகுதியெல்லாம்
முட்டி வளரும் தளிர்கள்..
தரையில் வீழ்ந்த கனியின்
விதையெல்லாம் மரங்கள்..

பசியாற்றக் கனிகள்
மணமூட்ட மலர்கள்
குளுமை நிரப்பும்
பசுமை பந்தல்கள்..

தன்னைத்தானே
வளர்த்துகொள்ளும் வனம்
ஒரு தன்னம்பிக்கை பிராணி
அதை உணர,உணர
என் உள்ளங்கையிலும்
ஓடுகிறது வனம்..

செ. புனிதஜோதி



கட கன்னி போய் வந்தா
ஒட்டி வரும் துச்சாதன
பார்வ நூறு

அனுசரன பேச்சால
கொட்டி வைக்கும்
சொல்லு நூறு

கணவன் பின் வர
முன் வரும் சாராய வாட
குழந்தை அழுது வைக்க
நகர விடாம மேல இயங்கியிருப்பான்
மறுத்த உடலுக்கு ஏது மருந்து

கன்னத்தில் இருக்கும் கணவனின்
கை ரேகை கண்டு
பக்கத்து வீட்டு தோழி கேட்பாள்
பரிசு பலமா என்று
கேட்டவளின் கை அவள் முதுகை வருடும்
அவளின் பரிசு அங்கிருக்கலாம்

மார்புக்கு வரியென்று
மார்பை அறுத்து தந்தாளாம்
கேரள வீரச்சி

வரியொன்றும் இல்லை தினம் அறுக்கும்
இராமன் போர்வையில்
அரக்கர்கள் பார்வை

அழும் ஆண் பிள்ளையிடம்
பாலோடு ஊட்டுகிறேன்
மகனே பெண் உடம்பு போதை அல்ல
நீ வெளி வந்த பாதை என்று

கதிரவன் வீ

சாவியெதுவும் தேவையில்லாமல்
கனவுப்பூட்டைத் திறக்க
இளநீரினில் தண்ணீராய்
சீவிய நுங்கின் கண்களாய்
கனவுகளில் தொங்கிய
தோரணங்களாக
யாருமறியா காட்சிப் பிழைகளின்
உருவ மாறுதல்கள் நினைவுச் சுழலில்
சூழலுக்குகந்த வர்ணம் மாற்றி
வெங்காயத்தை உரித்தாற் போல
ஒன்றுமற்று அவசியமாகிறது
ஓர் கண்விழி திறத்தலில்

பூங்கோதை கனகராஜன்

உருண்டு திரண்டவர்கள்
ஊருக்குள்
நுழைந்து கொண்டிருக்கிறார்கள்
அடித்து வெளுக்க


ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது
மலையிடுக்கில் சிக்கிக் கொண்ட
மேகங்களை காப்பாற்ற

மேகங்களின்
மனிதச் சங்கிலி போராட்டம்
வெற்றியடைந்தது மழை

கருமை மேகங்களை
வெளுத்தது மழை

வாடாத பூக்களை
கொண்டையில் சூடியிருக்கிறது
மலைகள்

செ.ரா.கிருஷ்ணகுமாரி



யாரோ சொன்னார்கள் என்று
உன்னில் குறைகள் இல்லை

யாரோ சொன்னார்கள் என்று
அந்த ஒரு சிலருடன் உன்னை
ஒப்பிடத் தேவையில்லை

யாரோ சொன்னார்கள் என்று
அவர்கள் அபிப்பிராயங்கள்
எல்லாம் சரியானதும் இல்லை

யாரோ கல் எறிந்தார்கள் என்று
நீ குழம்பிப் போக தேவையில்லை

யார் என்ன சொன்னாலும்
நீ சென்று கொண்டே இரு!

ஓடும் நதி எப்போதும்
சலசலப்புக்கு அஞ்சுவதில்லை

பாத்திமா சுமையா

## சிலந்தியைச் சுற்றி வலைகள்



வாழ்க்கை அழகாய்த் தெரிகிறது
மரணம் மணி அடிக்கும்போது

அன்றாடம் சலிப்பை
விநியோகித்துகிடந்த உடம்பு
ஒரு தேவதையின் சிறகைப்போல்
லேசாக இருக்கிறது வாழ்க்கை
முற்றும் தருவாயில்

சிலந்தி வலைக்குள்
சிக்கியிருந்த உயிர்ப்பூச்சி
தளையறுபடும் தருணத்தில்
தன் சுதந்திரத்தை எடுத்துக்கொண்டு
ஓடத் தயாராகிறது.

தீக்குச்சிக்குள் இருந்த தீ தெரியாமல்
தீப்பெட்டியை சுமந்துகொண்டே
அலைந்துகொண்டிருக்கிறோம்

மரணக்குஞ்சு வெளிவரும்வரைநாம்
அறிவதில்லை நாம் அடைகாத்தது
நமக்கானது என்று
எல்லாக் கோழிகளும் அப்படித்தான்

உருட்டிக்கொண்டே இருக்கிறோம் பந்தை
'இன்னிங்ஸ்' முடியும்வரை
'பௌலிங்' செய்ய நினைக்கும்போது
ஆட்ட முடிவுக்கான கை
தூக்கப்பட்டுவிடுகிறது

"தீ இனிது" என்ற கவிதை வரி
இனிக்கிறது நம்மைச் சுடும்போது
ரசிப்பு நம்மைவிட்டுப் போய்விடுகிறது

கவிஞனின் இரங்கற்பா பிடிக்கிறது
அது நமக்கானது அல்ல எனும்போது

எல்லா மரணங்களும் செய்தியாகிறது
நம் வீட்டுக் கதவைத் தட்டும்போதுதான்
அது மரணமாகிறது

ஜெயதேவன்



## எங்கு இருக்கிறதோ அந்தப் பறவை

அடைமழை ஓய்ந்தபின்
கூரைமேல் அடுக்கடுக்காய் வெள்ளை
மேகத்திட்டுகள்
மஞ்சளும் பழுப்பும்
பூசிக்கொள்ளும் வானம்..

நேரெதிர் குடைப்பிடித்தவாறு
நகரும் மனிதர்கள்..

ஒன்றன்மீது ஒன்றாக விழும்
மழைத்துளி
கசக்கிப்போட்ட காகித கப்பல்கள்
இன்னும் உலராத ஈரத்துணிகள்..

நேற்று வீட்டிற்கு வந்த பறவை
இன்று மழையில்
எங்கு மாட்டிக்கொண்டதோ..!

ச. இராஜ்குமார்

நடுங்கும் கால்கள்
வெப்ப வார்த்தைகளைத்
தேடிக் கொண்டிருக்க
இங்கு யாருமில்லையென
எல்லா இரவுகளிலும்
எழுதி வைப்பதே
பாதுகாப்பாயிருக்கிறது
எனக்கு..

திசைகள் அசைந்த பின்னும்
இருண்டே கிடக்கும்
பகலிலும்
நாட்குறிப்புகள் தொடரும்..
நீ..
தனித்தவள்
என்றபடியே..

அ.ராஜ்குமார்



## ஒரு பக்க அன்பு

ஆழ்கடல் அமைதி போலான
உன் மவுனத்தை என்னால் எனக்குள்
பத்திரப்படுத்திட இயலும்
அதன் கலை நயத்தைப் போற்றி
காப்பாற்றும் முகமாக

அம்மந்திரம் உலைந்தால்தான்
நமக்கென நற்சூழல் வாய்க்க
ஏதுவான நிலை
அமையப்பெறுமென்பதால்
முயற்சியற்று கல்மனதாய்
சமைந்தேயிருக்கின்றேன்

உன் நிழலைப்பார்த்து நான்
சுற்றம் மறந்து ரசித்து நிற்பதெல்லாம்
உன் நிழலென்பது
ஒளி மூலத்தில் நீ வழங்குகின்ற உனது
அருளே என்பதால்தான்

ஓடும் நதியோடு
மற்றொரு நதி கலந்து போகையில்
நதியின் பொலிவு மேம்படுவது போன்று
எனதெண்ணத்தோடு உனதெண்ணமும்
இரண்டற ஐக்கியமாய் பிணைந்திட்டால்
பின் விளைவினைத் தந்து நின்று அவை
ஜோதியென ஒளிரவேச்செய்யும்
நாலாபுறமும் பாய்ந்தோடும்
மழைநீர் பிரனாலம் வந்து சேர்கையில்
ஒன்றாகி ஒரே திசையில்
ஒருங்கே பாய்வது மாதிரி

மழைக்கால அந்தியில்
நளிர் சூழும் மேனிக்கு
ஆறுதல் ஈந்திடும் தேநீராய்
கவலைபூண்டு கொடுந்துன்பத்திலிருக்குமெனக்கு
உன்னிலிருந்து என்றுவரும்
எனக்கான சமிக்ஞை என்பதே
என் பார்வையாகிப் போனது

விதை சுமந்து எருக்கன் பஞ்சுப் பிசிறு
காற்றில் பறப்பதும்கூட
ஒரு வேண்டுதலோடேதான்..

சுப்பையா கந்தையா



ஒரு கவிதையை
நினைத்துக்கொண்டே வந்தேன்
நனைந்து கொண்டே
வந்த கவிதை
என்னோடு வீட்டிற்குள் வராமல்
காற்றோடு செல்கிறது.
சில சொற்கள் உருண்டோடி
சாலையில் விழுகிறது.
சில சொற்கள் குடிசைக்குள் குதிக்கிறது.
சில சொற்கள் வாகனத்தில் மோதுகிறது.
சில சொற்கள் யார் வீட்டு கதவையோ தட்டலாம்
என் கவலையெல்லாம்
அந்த சொற்களை கவிதையென்று
நினைக்காவிட்டாலும் பரவாயில்லை.
எழுத்துக்கூட்டி வாசிக்க முடியாத
அடர்த்தியில்
உயிரின் வாசம் வீசும் அதை
மண்ணின் மோகமெனலாம்
மரத்தின் தாகமெனலாம்
ஏரி குளங்களின் ஆடையெனலாம்
தாவரங்களின் உயிரெனலாம்
உயிர்களின் தேடல் என்றும் சொல்லலாம்
இப்படி சுழலும் சொற்களை
போகிற போக்கில்
மழையென சொல்லிவிடாதீர்கள்.

நயினார்

பூமியிலிருந்து
புறப்பட்டு நடுவானில் வெடித்த
விமானத்தின் உதிரிபாகம்
எங்கு விழுந்ததென தெரியவில்லை
தேடியெடுத்து மீண்டும் அதை விமானமாக
பறக்கவிடும் ஆசையில் அல்லது
அதற்கொரு முதல் தகவல் அறிக்கை எழுத
உதிரிப் பாகங்களைத் தேடுவதைப்போல
ஆனந்த நாளில் பறந்து
வெடித்த மகிழ்ச்சியின்
உதிரி உணர்வுத் துண்டுகளைச்
சேகரித்துக்கொண்டிருக்கிறேன்.
இறக்கைகள் ஒரு நிலத்தில்
மேல்கூடு ஒரு கடலில்
மற்றவை கருகிவிட்டன
வெடித்த துயரத்திற்கு உடைந்ததை வைத்து
விபத்தை ஆராயலாம்.
நான் மகிழ்ச்சியை ஆராய்கிறேன்.
கீழே விழும்வரை பாருங்கள் அது நல்ல உயரம்.

குமரன்விஜி



கசையடிக்கொடு
காயங்கள் கொடு

காதலுக்காக முள்முடியும்
சூட்டிக்கொள்கிறேன்..

ஆனால்
பிரிவு சிலுவையில் மட்டும்
என்னை அறைந்துவிடாதே..

மூன்றாம் நாளில்
உயிர்த்தெழ
என்னால் முடியாது.

நட்சத்திரப்பாடகன்

வாழ்ந்து கெட்ட வீடு என்றபடி
நீங்கள் கடந்து செல்லும்
சிதிலமடைந்த வீட்டுக்குள்தான்
ஈன்ற குட்டிகளுக்குப்
பாலூட்டிக்
கொண்டிருக்கிறது
ஒரு தாய்ப்பூனை!

நேசமிகு ராஜகுமாரன்

காற்று எப்போதும்
நிற்பதில்லை..
உன்னிடமிருந்து வரும் போது
வாடைக் காற்றாகவும்,
என்னிடமிருந்து செல்லும் போது
தென்றல் காற்றாகவும்
வீசிக் கொண்டுதான் இருக்கிறது..

ஈஸ்வரி நந்தா



ஏதோவொரு திசையில்
செல்லும் என்னில்..
திடுமெனத் தோன்றிய
கவிதை தான் நீயெனக்கு..

தலைப்பிட்டதோ நீ
தலையசைத்ததோ நான்..
விருப்போடு எழுதிய கவிதையில்
விருப்பின்றி விழுந்தது முற்றுப் புள்ளி..

மையொன்றும் தீரவில்லை தீரா
மையல் மட்டும் மாறிப் போனது..
வர்ணங்கள் வெளுக்கும் இயல்
புரிந்து கொண்டேன் நன்கு..

அண்மித்த ரசனைகள் பலநேரம்
ஆபத்தானதில்லையா..
சூடு கண்டு தான் சிந்தை தெளியும் என்றிட
விதியை நொந்து கொண்டு என்ன பயன்..

அகம் வென்ற அந்தக் காதல்
இப்போது என் காகிதத்திடம் சரண்..
இன்றுமே கவியாய் சஞ்சரிப்பதில்
எனக்கொன்றும் இல்லை முரண்..

ஃபாத்திமா சில்மியா

மந்திரித்த மொழி கொண்டு
மெல்லினத்தின் சாயலை
சிதைத்துவிட்டு வன்மத்தை உமிழ்ந்தபடி
அகோரியாய் ஏன் கிறுக்குகிறாய்..

வல்லினத்து ஓசை புணர்ந்து சல்லாபிக்கும்
எதுகையும் மோனையும் எதிரெதிரே மேடையேற
கவிதைகளை தீயிடாதே..

மெய்யோடு உயிர் புணர்ந்து
உயிர்மெய்யால் ஆலாபித்து
திகட்டத்திகட்ட ரசித்திட தீண்டும் மொழியால்
உணர்வுகளை மயக்கிடாது
ஒப்பனைகளற்ற பவித்திரமாயான
புதிதாய் நறுமுகையிட
உன் ஆத்மார்த்தமான
காதலின் மொழிபோல் சிலாகித்தபடி
ஆலோலித கண்களால் தியானம் செய்
கபடமற்றொரு கவிதை தா..ஃ

அசரீரிபோல் ஒரு
கவிதை சொல்கிறேன்..

ஜீ.சுமித்ரா



## அசையா புத்தன்

சூடு நீராவியில்
நாசியை சீண்டும்
தேநீர் வாசம்

வட்டக் குடுவையில்
வெளிக்கதவினை தேடும்
மீன்

காற்றில் கலந்து
கசியும் இசை

சாரலில் உணர்வு
சீண்டும் மழை

பரிசாக வந்த அயல் தேச
தேறல் நீள்வடிவ பாட்டில்

தனியே சுகிக்க
வழிமொழியும் புத் தகம்

தட்டவே பெறாத
பூட்டாத கதவு

இவ்வளவு இருந்தாலும்..

எதிலும் நான் கரையாத
பார்த்துக் கொள்கிறவள்
பக்கத்து அறையில்.

தனது இருமல் மொழியாலும்
நினைத்து போதெல்லாம் தட்டும்
வாக்கிங் ஸ்டிக்
லொட் லொட் சத்தத்தாலும்
உரையாடுகிறாள் தாய்

புத் / சித்தனாகி கிடக்கிறேன்.
நான்.

இரா மதிபாலா



## காற்றில் கரைந்த கனவுகள்

நாதஸ்வரத்தில் நளினமாகவும்,
புல்லாங்குழலில் இனிமையாகவும்
வரும் காற்று..

எல்லோரது இதயத்திலும் கூட
ஏதேதோ செய்கிறது..

காற்றோடு விளையாடியது
மரங்கள்..

காற்றோடு கதை பேசியது
பயிர்கள்..

காற்றோடு உறவாடியது
உயிரினங்கள்..

அனைத்துமாக நேற்றோடு
முடிந்தது எங்கள் கனவுகள்..

இருப்பவன்,இல்லாதவனென
ஏதுமறியா காற்று,
தென்றலாய் மட்டுமே
இருந்துவிடக் கூடாதா..

மாசுபட்ட காற்றுக்கு மனிதர்கள் மேல்
என்ன கோபமோ..

தூசுபட்ட கண்ணில் அல்லவா இன்று
துரும்பை விட்டு ஆட்டுகிறது..

கண்ணுக்கு தெரியாத காற்று,
கற்பூரத்தை மட்டுமே
கரைப்பதில்லை..

ஊரையும், அதன் பேரையும்,
மரத்தின் வேரையும்,
விவசாயப் பயிரையும்,
மொத்தத்தில் மனித
உயிர்களையுமாக..

காற்று
அந்தப் பூங்காற்று இன்று
புரிந்து கொள்ள
இயலாத புயல்காற்றாய் மாறிட
அனைத்தும் புரண்டேப்போனது.

கார்த்திகேயன்



கடன்காரனுக்கு என்னவெல்லாம்
திருப்பித் தர வேண்டும் என்பதை
என்னிடம் சொல்லிவிட்டு
சென்றிருக்கலாம்..
என்னையும் கேட்கிறான்
ஒருவன்.
நீ கரைந்து போன
இடத்தில்
வட்டிக்கு ஒரு முத்தம்
என்னாலாகுமா..
நீ நுகர்ந்து போன
செடியில் தவணைக்கு
ஒரு காம்பில் இருபூ என்னாலாகுமா..
நீ படர்ந்து போன கொடியில்
பசிக்கு ஒரு பிடி இரவு என்னாலாகுமா..
நீ நிகழ்த்திய இடத்தில்
இன்னொரு காக்காகடி நாடகம் என்னாலாகுமா..
நீ எழுதிய கதையில்
நான் மனைவி தானே அன்பே
விபச்சாரியாக என்னாலாகுமா..
நீ இறந்து போன இடத்தில்
இப்போது நிற்கிறேன்..
இது என்னாலாகும் என்று நம்புகிறேன்.
என்னையும் ஏற்றுக்கொள்.
இதோ வருகிறேன் அணைத்துக் கொல்..

இயலிசம்

## தெரிந்து சாகுதல்

காதலிக்கலாம் என்றாய்
நட்பாய் இருக்கலாம் என்றாய்
பிறகு எதுவும் வேண்டாம் என்றாய்

ஏதாவதாக இரு ஆனால்
கூடவே இரு என்றேன்

நீ என்ன செய்தாலும்
நான் உன்னை விட்டு
இருக்கமாட்டேன்
என்பது மட்டும் உனக்கு
நன்றாக புரிகிறது

நீ படிகளில் இருந்து
தள்ளிவிடுவது
அறியாமல் உன் கைகளை
பற்றிக்கொள்கிறேன்!

தமீம்.அசாருதீன்



மிக நிசப்தமாக
இருக்கிறது
மிகை வெளிச்சத்தின்
கண்கள்
ஒளிப்பொருந்தியதாய்
புறமெங்கும் சூழ்ந்து விட்டது..
இங்கு மௌனங்கள்
கற்றுத்தெளியாதவன் கையில்
ஒரு புல்லாங்குழல்
வாய்த்ததுபோல்
அதிரும் பெருமூச்சுகள்..
ஒரு வாசிப்பாளன்
தன் இசைக்கருவிகளை
பயிற்றுவிக்கும்
துவக்கத்தின் சாயல்
ஒவ்வொரு மீட்டலிலும்..
தேடலுக்குப்பின்
தன்னை
தொலைத்தவன் கையில்
இன்னுமொரு
ரோஜா மிச்சமிருக்கிறது
புதிய ஆயத்தங்களுக்காய்..

நிலாபாரதி

நீண்ட புணர்தலின்
இறுதிச் சிலிர்ப்புகளிலிருந்து
மீண்டெழுந்த பின்னிரவின்
ஆழ்மௌனத்தில்
ஒவ்வொரு அணுவாய் பிய்த்து
உடல் தின்று தீர்த்த
அவ்விருப் பேய்களும்
மீண்டும் விழித்தெழுந்துஒன்றினுள்
மற்றொன்று ஆழமாய் தேடுகிறது
கடவுளையும் தின்ன!

கி.கவியரசன்



## என்னை எப்படி அழைக்க..

இத்தனை
வருடங்களில் என் பெயரை
சொல்லி நான் இதுவரை
என்னை நான் அழைத்ததில்லை..

பெயர்
சூட்டும் போது என் காதில்
யார் என் பெயரை சொன்னார்கள் என்று
தெரியவில்லை..
போகட்டும்..

நான்
அழைத்தால் நான்
திரும்பி பார்ப்பதில்லை என்பது
என் பெயருக்கு நன்றாகவே தெரியும்..

சித்தப்பா
பெரியப்பா அண்ணா என
நிறைய பெயர்களில் என்னை அழைக்கிறார்கள்
திரும்பிப் பார்க்கிறேன்..

அன்பின்
பெயரால் அழைக்கப்படும் போது
திரும்பிப் பார்க்கத்தான் செய்கிறோம்..

கண்ணாடியின்
முன் நின்று கொண்டு
என் பெயரை சொல்லிப் பார்க்கிறேன்..
பொருத்தமாக இல்லை என்கிறது பிம்பம்..

உண்மையை
பேசும் கண்ணாடியை நான்
உரிமையுடன் நேசிக்கிறேன் இப்போதெல்லாம்..

பெயர்
அழகாக இருக்க வேண்டும்
அல்லது அந்த பெயரை அழகாக்க வேண்டும்..

பன்னீர்செல்வம்



நீ அணிவித்த
வெள்ளி மோதிரத்தை
தொலைத்து விடலாம் தான்.

உன் கண்ணாடி
வளையல் துண்டுகளை
உடைத்து விடலாம் தான்.

உன் ஒற்றை கூந்தலை
சோற்றில் கலந்து உண்டு
செரித்து விடலாம் தான்.

உன் ஹேர்பின்னை
பூ வாங்கும் ஒருத்திக்கு
இரவல் தந்திடலாம் தான்.

உன் ரப்பர் பேண்டை
தலைவிரி கோலமாய்
தெருவில் நடமாடுபவளுக்கு
அளித்து விடலாம் தான்.

உன் பெயர் என் பெயர்
எழுதப்பட்ட 20 ரூபாய் நோட்டை
கண்டக்டரிடம் கொடுத்திடலாம் தான்.

என்றாலும்
எந்நேரமும் மனதைக் குமையும்
என் நெஞ்சின் மேல்
கைவைத்து நீ கொடுத்த
நம்பிக்கை வாய் மொழிகளை
என்ன செய்வது...

தினேஷ் பாரதி

ஏற்க முடியாதென
வெறுக்க முடியாத
ஏதேனும் ஓர் ஒழுங்கு
எல்லாவற்றிலும் இருக்கிறது.
ஒழுங்கின் ஒன்றில் நான்
ஒட்டி இருப்பேன்.

அன்பழகன் ஜி



## ஆயுத பூசை

கத்தி கபடா வேல்கம்பு
வேட்டைத் துப்பாக்கி
ஆயுதங்கள் யாவும் பெருமூச்சுவிட்டன,
அப்பாடி... இன்று நமக்கு விடுமுறை
யாரும் கைத்தொடார்...

குளிப்பாட்டி, மஞ்சள், குங்குமமிட்டு,
நடு வீட்டுலே வைச்சு,
கற்பூரம் காட்டி, மணியடிச்சு,
நல்ல பூசை...

பிற்பகலில் தெருவில் முணுமுணுப்பு,
மாலைக்குள் பெரிய சண்டை,
ஆயுதங்களின் மோதல்

யாரும் பூசையில்,
வைத்த ஆயுதங்களை
எடுக்கவில்லை.

நாவால் சுட்டு, பார்வையால் குத்தி,
மெய்ச்சாடி, வியர்வை நுகர்ந்து,
கடுஞ்சொற்கேட்டு,
நடந்துகொண்டிருக்கிறது
ஓர் ஐம்பொறி யுத்தம்

இந்த ஐம்பொறி ஆயுதங்களையும்
அடக்கி மனப்பூசையில் வைத்து விட்டு
எப்போதும் அன்பாயுதம்
ஏந்துவது எப்போது?

நரேன்

படைப்பு
சமூகத்தின் இணைப்பு

## சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்!

"ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும்" என்ற உயரிய எண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின் ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.

**புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**இலக்கிய படைப்பு குழுமம்**
#3, அஜந்தா டவர்ஸ், தரைத்தளம், கார்ப்பரேஷன் காலனி தெரு,
கோடம்பாக்கம், சென்னை – 600 024
Ph: +91 7338847788
padaippu admin@padaippu.com www.padaippu.com